3. கவன ஈர்ப்பு.

(அ) தமிழ்நாடு கெமிக்கல் நிறுவனத்தைத் தனியாருக்கு விற்பதால் தொழிலாளர் பாதிப்பு.

திரு. டி. ஆர். வேங்கடாரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறப்பாக இயங்கிவரும் தமிழ்நாடு கெமிக்கல் நிறுவனத்தை, அரசு தனியாருக்கு விற்பனை செய்வதாக வந்துள்ள தகவல்களால் தொழிலாளர்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடு, கூச்சல்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதியின்றிப் பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது. யாரும் என்னிடம் அனுமதி பெறவில்லை. (குறுக்கீடு) யாருக்கும் அனுமதி கிடையாது. மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் தொழிற்சாலைகளை நிறுவி இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சியை துரிதப்படுத்துவதே தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (டிட்கோ) நோக்கமாகும். அப்படி டிட்கோவால் நிறுவப்பட்ட நிறுவனங்கள் வளர்ந்து தானாகத் திறம்பட செயல்படக்கூடிய நிலையை அடைந்தவுடன் அந்நிறுவனங்களில் முதலீடு செய்துள்ள தனது பங்குகளை டிட்கோ விற்று, அதன்மூலம் கிடைக்கும் நிதியை மற்ற புதிய தொழிற்சாலைகளை நிறுவ பயன்படுத்துவது அதன் கொள்கையாகும்.

1987 ஏப்ரல் 11] [திரு. க. இராசாராம்]

2. பசும்பொன் முத்துராமலிங்க மாவட்டம் காரைக்குடியில் சோடியம் ஹைட்ரோ சல்பைட் மற்றும் திரவ கார்பன்-டை-ஆக்ஸைடு உற்பத்தி செய்வதற்காக நிறுவப்பட்ட தமிழ்நாடு கெமிக்கல்ஸ் புராடக்ட்ஸ் லிமிடெட், தனது வணிக ரீதியிலான உற்பத்தியை 1976 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் தொடங்கி, இலாபத்தில் இயங்கி வந்தது. எனவே, டிட்கோ மேற்குறித்த தனது கொள்கையின்படி தமிழ்நாடு கெமிக்கல் புராடக்ட்ஸ் நிறுவனத்தில் உள்ள தனது பங்குகளை விற்று, அந்நிதியைக் கொண்டு புதிய தொழிற்சாலைகள் துவங்க உத்தேசித்தது. இதற்காக வரப்பெற்ற விருப்பறிவிப்புகளில் (offers) குடியாத்தத்தைச் சேர்ந்த திருவாளர்கள் திருமகள் மில்ஸ் லிமிடெட் மற்றும் அதன் இயக்குநர்கள் குறிப்பிட்ட விலையே அதிகமானதும், அரசுக்கு ஆதாயம் கொடுக்கும் வகையிலும் இருந்தது. இந்நிறுவனம் ரூ. 10 மதிப்புள்ள ஒவ்வொரு தகைமை முறை பங்கினை (Equity Share) ரூ. 45.38-க்கு வாங்க விருப்பம் தெரிவித்திருந்தது. எனவே, டிட்கோ நிறுவனம் இந்நிறுவனத்தில் உள்ள தனது ரூ. 10 மதிப்புள்ள 10,33,003 தகைமை முறை பங்குகளை, ஒவ்வொரு ரூ. 10 மதிப்புள்ள தகைமை முறை பங்கினை ரூ. 45.38-க்கு விற்க, அரசு ஆணை நிலை எண் 957, தொழில், நாள் 5—9—1986-ல் ஆணை வெளியிடப்பட்டது. இந்திய தொழில் வளர்ச்சி வங்கி போன்ற நிதி நிறுவனங்களும் மேற்சொன்ன விலையை ஏற்று தங்களது பங்குகளையும் அதே விலைக்கு விற்க விருப்பம் தெரிவித்திருந்தன. அரசு ஏற்கெனவே வெளியிட்ட ஆணையின்படி, டிட்கோ, தமிழ்நாடு கெமிக்கல் புராடக்ட்ஸ் நிறுவனத்தை விற்பதற்கு முறைப்படியான நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. இந்த ஏற்பாட்டில், நிறுவனத்தில் பணி புரியும் தொழிலாளர்களின் பணி நலன்களும், பாதுகாப்பும் பொதுவாக அடங்கும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் கையிலே உள்ள கம்பெனிகளையெல்லாம் விற்பது என்று கொள்கை ரீதியாக அரசு ஏதாவது முடிவெடுத்து இருக்கிறதா? அப்படியென்றால், அரசு நிறுவனங்களை விற்கின்றபோது இதுபோல் இலாபம் ஈட்டுகின்ற கம்பெனிகளை விற்காமல் நஷ்டத்தில் இயங்குகின்ற கம்பெனிகளை விற்பதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன். (கூச்சல், குழப்பம், குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படி வந்து, அவை நடவடிக்கையைத் தடுப்பது முறை அல்ல. திரு. ரமணியிடம் சொல்வேன். (குறுக்கீடு) நீங்கள் எல்லோரும் பேசுவது முறை அல்ல. யாருக்கும் அனுமதி கிடையாது. (குறுக்கீடு) ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். யாருக்கும் அனுமதி கிடையாது. (குறுக்கீடு). மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, இலாபம் வந்தாலும் சில தொழில்களை உருவாக்கி, அது நல்ல நிலைக்கு வந்தவுடன், அதை விற்று அதிலே வருகிற இலாபத்தை மற்ற தொழில்களிலே ஈடுபடுத்துவது தான் டிட்கோவினுடைய கொள்கையாகும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: தலைவர் அவர்களே, இது வரை டிட்கோவினுடைய கம்பெனிகள் எத்தனை விற்கப்பட்டிருக்கின்றன? அதிலே இலாபம் அடைந்த கம்பெனிகள் எத்தனை விற்கப்பட்டிருக்கின்றன? நஷ்டம் அடைந்த கம்பெனிகள் எத்தனை விற்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தற்போது அது பற்றிய குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் அளிக்கத் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடு, கூச்சல்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது முறையல்ல, அழகல்ல. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அழகல்ல. சபையின் கண்ணியத்தை நீங்கள் கெடுக்கின்றீர்கள். பாரம்பரியத்தை, மரபைக் கெடுக்கின்றீர்கள். அவ்வளவுதான் சொல்வேன். (குறுக்கீடு) மீண்டும், மீண்டும் சொல்வேன். நீங்கள் இப்படிச் செய்கிறீர்கள். நான் ஏதாவது செய்தால், அது பிரச்சினையாகிவிடுகிறது. ஆகவே, மரபைக் காப்பாற்றுங்கள். (குறுக்கீடு) மரபைக் காப்பாற்றுங்கள். இன்றைக்கு நீங்கள் எல்லாம் பேசுகின்ற காரணத்தால்தான், இந்த அவைக்கே சம்பந்தம் இல்லாதவர்கள் எல்லாம், இந்த அவையைப்பற்றி வெளியே விமர்சிக்கக் கூடிய அளவுக்கு நீங்கள் காரணமாக இருக்கிறீர்கள்.

1987 ஏப்ரல் 11] [பேரவைத் தலைவர்]

(குறுக்கீடு) இந்த அவையின் உறுப்பினராக வரத் தகுதி இல்லாதவர்கள் எல்லாம் (குறுக்கீடு) நீங்களே இந்த அவையின் பாரம்பரியத்தைப் பாதுகாக்கவேண்டும். கண்ணியத்தைப் பாதுகாக்கவேண்டும். முதலாவது, இந்த நிறுவனத்திற்கு நீங்கள் ஃபெயித்ஃபுல்லாக இருங்கள். உண்மையாக இந்த நிறுவனத்தைக் காப்பாற்றுங்கள். மக்களுக்காகப் பேசுங்கள். தனி மனிதருக்காகப் பேசாதீர்கள் (குறுக்கீடு) தனி மனிதருக்காகப் பேசாதீர்கள். மக்களுக்காக, நம்முடைய திரு. ரமணி இப்படி வேகப்பட்டது இல்லை. மக்களுக்காக வேகப்படவில்லை. (குறுக்கீடு) மக்களின் பிரச்சினைக்காக வேகப்படவில்லை. தனி மனிதருக்கு இந்த சட்டமன்றத்தில் இடம் கிடையாது. மக்களுடைய பிரச்சினைகளைப் பேச முடியும். யாருக்காகவும் இங்கே பேச முடியாது. யாருக்காகவும் இங்கே வக்காலத்து வாங்க முடியாது. இங்கே இருக்கக்கூடிய தமிழ் நாட்டு மக்களைப்பற்றிப் பேசுங்கள். சாதாரண மக்களைப் பற்றிப் பேசுங்கள். உங்களுடைய எண்ணம் புரிகிறது. உங்களுடைய பின்னணி புரிகிறது. (குறுக்கீடு) அரசியல் தெரிகிறது. அவ்வளவுதான்.

(ஆ) திருத்தங்கலில் உள்ள பிற்பட்டோர் நல விடுதி பழுதடைந்திருத்தல்.

திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காமராஜர் மாவட்டம், சிவகாசி தொகுதி திருத்தங்கல் பேரூராட்சியில் பிற்பட்டோர் நல விடுதி அமைந்துள்ள வாடகைக் கட்டிடம் இடிந்து விழும் நிலையிலிருப்பது குறித்த அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடு, கூச்சல்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவரவர் இருக்கையில் அமரவேண்டும். நல்லதல்ல. எல்லோரையும் பற்றி நாட்டுக்கே தெரியட்டும். பாரம்பரியத்தைக் காக்கத் தவறுகிறீர்கள். மரபை மீறிவிட்டீர்கள். (குறுக்கீடு) இந்த சட்டசபையின் மரபை நீங்கள்தான் இப்படி கெடுத்துக் கொண்டிருக்கிறீர்கள், சுயநலமிகளுக்காக, தனி மனிதருக்காக. நாட்டுக்காக அல்ல